

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in · murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 207 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – மாசி 24 – சனிக்கிழமை 08 மார்ச் 2025 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 207 : Thiruvalluvar Year - 2056 - Maasi 24 - Saturday 08 March 2025 - Kovai ★★ 12 Pages ₹ 5.00


## இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம் - 10

# இன்னுயிர்த் தமிழை எந்நாளும் காப்போம்!



**நம் நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு உங்களில் ஒருவன் எழுதும் இந்தி ஆதிக்க எதிர்ப்பு குறித்த நிறைவு மடல்.**

மும்மொழிக் கொள்கையை ஏற்க மாட்டோம் என்று தமிழ்நாடு பிடிவாதமாக இருப்பதால் ஒன்றிய அரசு தர வேண்டிய நிதியை இழக்க வேண்டியுள்ளதே என்று சிலர் கேட்கிறார்கள். **தமிழ்நாடு பிடிவாதமாக இல்லை. தன்னுடைய மொழிக்கொள்கை என்ன என்பதில் தெளிவாக இருக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு தான் மாநில உரிமைகளை மதிக்காமல், தமிழ்நாட்டுக்கு கல்வி நிதியைத் தரமாட்டோம் என வீண்பிடிவாதம் பிடிக்கிறது.**

இந்திய ஒன்றியத்தில் இதற்கு முன் இருந்த பல ஆட்சியாளர்கள் இந்தித் திணிப்பு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். அப்போதும் தமிழ்நாடு உறுதியாக எதிர்த்து நின்றது. இந்தியை நுழையச் செய்யும் கல்வித் திட்டங்கள் தான் ஒன்றிய அரசால் நிறுத்தப்பட்டனவே தவிர, தமிழ்நாட்டின் கல்விக்கான ஒன்றிய அரசின் நிதியை நிறுத்தவில்லை. தமிழ்நாட்டுக்குச் சேர வேண்டிய பங்கினை வடஇந்திய மாநிலங்களுக்குப் பிரித்துத் தரவில்லை. பா.ஜ.க. அரசு தான் தமிழ்நாட்டு மாணவர்கள், ஆசிரியர்கள், அவர்தம் குடும்பத்தினர் வயிற்றில் அடிக்கின்ற படுபாதகச் செயலை செய்திருக்கிறது.

ஒன்றிய கல்வியமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்கள், “அரசமைப்புச் சட்டத்திற்கு மாறாக, தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையிலான மும்மொழிப் பாடத்திட்டத்தை தமிழ்நாடு ஏற்க மறுப்பதால்தான் நிதி அளிக்கப்படவில்லை” என்று ஊடகங்களிடம் தெரிவித்தபோதே, “மும்மொழிக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று அரசமைப்புச் சட்டத்தில் எங்கே தெரிவிக்கப்பட்டுள்ளது?” என்று கேட்டேன்.

ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியாளர்களிடமிருந்து இதுவரை பதில் இல்லை. **தி.மு.க அரசு இந்திய அரசியல் சட்டத்தை மதித்து நடக்கிறது. ஒன்றிய பா.ஜ.க. அரசு அந்த அரசியல் சட்டத்தையே சிதைக்கின்ற வேலையை செய்கிறது.**

இந்தியாவின் ஆட்சி மொழி - அலுவல் மொழியாக இந்தியுடன், இணை ஆட்சிமொழியாக ஆங்கிலமும் இருப்பதால், இந்த நிலை நீடிக்கவேண்டும் என்பதை தி.மு.கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.


தமிழ்நாட்டுக்கு மட்டுமின்றி, இந்தி பேசாத இந்திய மாநிலங்கள் அனைத்தின் தாய்மொழியையும் பாதுகாக்கின்ற வகையில், இந்தியாவின் முதல் பிரதமர் நேரு அவர்களிடம் உத்தரவாதத்தைப் பெற்ற இயக்கமும் தி.மு.க.தான். ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தியை மட்டுமே

### உங்களில் ஒருவன்

இந்திய ஒன்றியத்தின் ஆட்சி மொழியாக்கிட வேண்டும் என்பதற்கான முயற்சி தான் இந்தித் திணிப்பு. அதை நேரடியாகச் சொன்னால் தமிழ்நாட்டில் ஓட்டு வாங்க முடியாது, மக்கள் விரட்டி அடிப்பார்கள் என்பதால்தான் மும்மொழிக் கொள்கையில் இந்தியை வலியுறுத்தவில்லை என்றும், ஏதேனும் ஒரு மொழியை படிக்கலாம் என்றும் பா.ஜ.க. அரசு பசப்புகிறது.

‘இந்தி திவாஸ்’ கொண்டாடப்படும் போதெல்லாம் நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலத்தை வெளியேற்றிவிட்டு, இந்தியா முழுவதும் இந்தியை நடைமுறைக்குக் கொண்டு வருவோம் என்று உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் பா.ஜ.க.வினரும் தெரிவிக்கிறார்கள். இதன் உள்நோக்கத்தை தமிழ்நாடு உணர்ந்திருப்பதால்தான், இந்தி ஆதிக்கத்தால் எதிர்காலத்தில் தமிழர்கள் தங்கள் தாய்மொழியை அடிமைப்படுத்தி விட்டார்கள் என்ற வரலாற்றுப்பழி நேர்ந்திடக் கூடாது என்பதில் உறுதியாக இருக்கிறோம். ஆதிக்க மொழிகளை எதிர்க்கிறோம்.



திராவிட முன்னேற்றக் கழகம் கர்நாடகத்தில் இருக்கிறது. மராட்டியத்தில் இருக்கிறது. அந்தமான் - நிகோபார் தீவுகளில் கழகத்தினர் செயல்படுகிறார்கள். இந்தியாவின் **பல மாநிலங்களில் உள்ள தி.மு.க. உடன்பிறப்புகள் கன்னடம், மராத்தி, இந்தி, வங்காளம் என அந்தந்த மாநிலங்களுக்குரிய மொழிகளையும், அங்கே பயன்படுத்தப்படும் மொழிகளையும் அறிந்திருக்கிறார்கள். தி.மு.க. எந்த மொழிக்கும் எதிரியல்ல - வலிந்து திணிக்கப்படும் மொழிகளை மட்டுமே எதிர்க்கும்** என்பதை நடைமுறை எதார்த்தத்துடன் கடைப்பிடித்து வருகிறோம்.

அண்மைக்காலமாக, ‘இந்தி திவாஸ்’ கடைப்பிடிக்கப்படும் நாளில் மேற்கு வங்காளத்தின் தலைநகர் கொல்கத்தாவில் அந்த மாநில மொழிப்பற்றாளர்கள், இந்தி ஆதிக்கத்திலிருந்து வங்காள மொழியை மீட்க வலியுறுத்தி பேரணிகளை நடத்துகிறார்கள். மேற்கு வங்காள மாநிலத்தைச் சேர்ந்த கவிஞர்கள், அறிஞர்கள் ஆகியோரின் படங்களுடன் இந்தி ஆதிக்கத்தை அன்றே உணர்ந்து - இன்றும் எதிர்ப்புணர்வு குறையாமல் செயல்பட்டு வரும் திராவிட இயக்கத் தலைவர்களின் படங்களையும் பேரணியில் உயர்த்திப் பிடித்துச் செல்கிறார்கள்.

மராட்டிய மாநிலத்தில் அதன் தலைநகரான மும்பை தொடங்கி பல இடங்களிலும் இந்தி ஆதிக்கம் செலுத்திவரும் நிலையில், தங்கள் தாய்மொழியான மராத்தியை மீட்டெடுக்கும் வகையில், அம்மாநிலத்தின் மொழி ஆர்வலர்கள் மட்டுமல்ல, மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. கூட்டணி அரசும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. **பிறமொழி ஆதிக்கத்திலிருந்து**


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


## அண்ணா அமர்ந்தார்; தமிழ்நாடு எழுந்தது!

### கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, மார்ச் 8 -

பேரறிஞர் அண்ணா தலைமையிலான அரசு பதவி ஏற்ற நாள் மார்ச் 6- 1967. இந்த வரலாற்று தினத்தையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் ‘அண்ணா அமர்ந்தார்; தமிழ்நாடு எழுந்தது’ என்று பெருமிதம் பொங்க குறிப்பிட்டுள்ளார்.

முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:

**1967: அண்ணா அமர்ந்தார்; தமிழ்நாடு எழுந்தது!**

**தலைநிமிர்ந்த தமிழ்நாட்டுக்குத் தீங்கொன்று வருகுதென்றால் வேலெனப் பாய்வோம்! வேங்கையெனச் சீறிடுவோம்! வெற்றி வாகை தனைச் சூடிடுவோம்.**

இவ்வாறு முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




### ரூ.4.58 கோடி மதிப்பில்

## வருவாய்த் துறை அலுவலர்களுக்காக 51 புதிய வாகனங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

**சென்னை, மார்ச் 8–**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.3.2025) தலைமைச் செயலகத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், வருவாய்த் துறையில் பணிபுரியும் தனித்துணை ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோரின் பயன்பாட்டிற்காக 4 கோடியே 57 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான 51 புதிய வாகனங்களை (Bolero) வழங்கி, கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

வருவாய்த்துறை, மாநிலத்தின் நிருவாக அமைப்புக்கு முதுகெலும்பாக விளங்குவதோடு, சாதிச் சான்றிதழ், இருப்பிட சான்றிதழ், வருவாய் சான்றிதழ், பட்டா வழங்குதல் போன்ற சாமானிய மக்களின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், அரசின் பல்வேறு சமூகப் பொருளாதாரத் திட்டங்களை செயல்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றுகிறது. மழை, வெள்ளம், புயல் போன்ற பேரிடர் காலங்களில் மக்கள் துயர் துடைக்கும் துறையாகவும் இத்துறை விளங்கி வருகிறது. இத்துறையின் பணியினை மேலும் செம்மைப்படுத்தும் வகையில் அனைத்து வசதிகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல், துறை அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல். பொதுமக்கள் எளிதில் பயன்பெறும் வகையில் இணையவழிச் சேவைகளை வழங்குதல், அலுவலகப் பயன்பாட்டிற்காக வாகனங்கள் வழங்குதல் போன்ற பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

இவ்வரசு பொறுப்பேற்ற மே 2021 முதல் இதுவரை, வருவாய்த்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 16 கோடியே 46 இலட்சத்து 57 ஆயிரத்து 742 ரூபாய் செலவில் 150 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதன் தொடர்ச்சியாக, வருவாய்த் துறை அலுவலர்கள் தங்கள் பணியினை செம்மையாகவும், விரைவாகவும் மேற்கொள்ளும் வகையில், வருவாய்த் துறையில் பணிபுரியும் 4 தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) மற்றும் 47 வட்டாட்சியர்களின் பயன்பாட்டிற்காக மொத்தம் 51 புதிய வாகனங்கள் (Bolero BSVI ரகம்) வழங்கிட 4 கோடியே 57 இலட்சத்து 73 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்றையதினம் 25 மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த் துறை உயர் அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 51 புதிய வாகனங்கள் கொடியசைத்து தொடங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் முனைவர் மு.சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி. பெ.அமுதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.